அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

# 2023/2024

# தமிழ்

## ஆண்டு 4

| | |
|---|---|
| **நேரம்:** 120 மணித்துளிகள் | **மொத்தப்புள்ளிகள்:** 100<br>(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| **நாள்:** சனிக்கிழமை | **பக்கங்கள்:** 10 |

**பெயர்:**

**தமிழ்ப்பள்ளி:**

## பகுதி 1 - எழுதுதல்

**1. மிகப் பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடியிடுக.**

1. முத்தமிழில் ஒன்று
   ☐ கலை ☐ இயல் ☐ அறம்

2. மெய் எழுத்துகளின் எண்ணிக்கை
   ☐ 18 ☐ 12 ☐ 30

3. காகம் கரையும். அது போல ஆந்தை
   ☐ கத்தும் ☐ அலறும் ☐ கூவும்

4. நாம் கல்வியால்
   ☐ உயர்வேன்! ☐ உயர்வோம்! ☐ உயர்வாய்!

5. சிறுவனுக்குச் சிறுமி போல அரசனுக்கு
   ☐ நண்பி ☐ தலைவி ☐ அரசி

6. வானொலியைக் கண்டுபிடித்தவர்
   ☐ சாமுவேல் மோர்சு ☐ கிரகம்பெல் ☐ மார்க்கோணி

7. நான் ஓவியம் வரைகிறேன். நீங்கள் ஓவியம்
   ☐ வரைகிறாய் ☐ வரைகிறீர்கள் ☐ வரைகிறோம்

8. ஆடிப்பிறப்புக்கு நாளை
   ☐ வேலை ☐ விடுதலை ☐ பள்ளிக்கூடம்

9. தைமாதத்திற்குப் பின் வரும் மாதம்
   ☐ ஆனி ☐ பங்குனி ☐ மாசி

10. பள்ளி + கூடம் என்பதைச் சேர்த்து எழுதினால்
    ☐ பள்கூடம் ☐ பள்ளிகூடம் ☐ பள்ளிக்கூடம்

11. 200 என்பதன் எழுத்து வடிவம்
    ☐ இருபது ☐ இரண்டாயிரம் ☐ இருநூறு

12. முத்தமிழையும் அடக்கிய இலக்கியம்
    ☐ புறநானூறு ☐ நாலடியார் ☐ சிலப்பதிகாரம்

13. ஆசிரியர் ஒரு சிறந்த
    ☐ வழிகாட்டி ☐ வலிகாட்டி ☐ வளிகாட்டி

14. சிறுவன் பந்து அடித்தான். சிறுவர்கள் பந்து
    ☐ அடிப்பார்கள் ☐ அடிக்கிறார்கள் ☐ அடித்தார்கள்

15. செல்வங்களுள் சிறந்தது
    ☐ பணம் ☐ கல்வி ☐ வீடு

16. இன்று தொடர்பாடலில் முதலிடம் பெறுவது

☐ பறை ☐ கணினி ☐ புறா

17. எலுமிச்சை புளிக்கும். அது போல உப்பு

☐ உறைக்கும் ☐ துவர்க்கும் ☐ உவர்க்கும்

18. 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்ற பாடலைப் பாடியவர்

☐ எப்படி? ☐ எது? ☐ யார்?

19. திருக்குறளில் உள்ள அடிகளின் எண்ணிக்கை

☐ நான்கு ☐ இரண்டு ☐ மூன்று

20. தமிழ்மொழி மிகத் தொன்மையானது. தொன்மை என்பதன் பொருள்

☐ புதுமை ☐ இனிமை ☐ பழைமை

(20 x 1 = 20 புள்ளிகள்)

**2. பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து இடைவெளியில் எழுதுக.**

1. திருக்குறள் ______________________________ சிறப்பைக் கூறுகிறது.
   (அன்பை, அன்பின்)

2. ஆசிரியர் ___________________________________ப் பாடத்தை விளக்கினார்.
   (எங்களுக்கு, எங்களை)

3. நான் _________________________ மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்.
   (இப்பொழுது, அப்பொழுது)

4. தைப்பொங்கல் __________________________ கொண்டாட்டங்களுள் ஒன்று.
   (தமிழரில், தமிழரது)

5. பூங்காவில் உள்ள பூக்கள் ______________________________ மணம் வீசுகின்றன.
   (இவற்றுள், ஒவ்வொன்றும்)

(5x 2 = 10 புள்ளிகள்)

**3. தரப்பட்டுள்ள சொற்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

1. நண்பர்கள் ____________________
2. கொண்டாட்டம் ____________________
3. பழங்கள் ____________________
4. தண்ணீர் ____________________
5. வானொலி ____________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**4. பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியில் எழுதுக.**

| வண்ண வண்ண | சுடச்சுட | ஆடிப்பாடி | மெல்ல மெல்ல | மடமட |
|---|---|---|---|---|

1. ஆமை கடற்கரையில் ____________________ நடந்து செல்கிறது.
2. சிறுவர்கள் ____________________ மகிழ்ந்தார்கள்.
3. அறிவன் களைப்பினால் ____________________ எனத் தண்ணீர் குடித்தான்.
4. ஆசிரியர் ____________________ ஓவியங்களை அடுக்கி வைத்தார்.
5. அம்மா ____________________த் தேநீர் தந்தார்.

(5 X 2 = 10 புள்ளிகள்)

**5. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொல்லியம் ஆக்குக.**

1. தொன்மையானது / தமிழ்மொழி / மிகத்

________________________________________

2. நாலடியார் / அறிவுரைகளைக் / கூறுகிறது / தேவையான

________________________________________

3. கதைகளைக் / கூறினார் / பாட்டி / அறிவுள்ள

________________________________________

4. பண்பாட்டைப் / எமது / பேணுவோம் / நாம்

________________________________________

5. தாய்மொழியாகக் / தமிழைத் / தமிழர் / கொண்டனர்

________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**6. பாடநூல் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஆடிப்பிறப்பின் சிறப்பான நிகழ்வு எது?

________________________________________

2. செய்திகளை அனுப்பப் பயன்படுத்தப்பட்ட பறவை எது?

________________________________________

3. பெயர்ச்சொற்கள் இரண்டு எழுதுக.

________________________________________

4. சிறுகூலங்களுள் ஒன்றின் பெயரை எழுதுக.

________________________________________

5. நாலடியார் எத்தனை அடிகளைக் கொண்டது?

________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

7. **படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.**




1. ________________________________________________

________________________________________________

2. ________________________________________________

________________________________________________

3. ________________________________________________

________________________________________________

4. ________________________________________________

________________________________________________

5. ________________________________________________

________________________________________________

(5 X 3 = 15 புள்ளிகள்)

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக் கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

பட்டம் விடுதல் பொழுதுபோக்காக விளையாடப்படும் ஒரு விளையாட்டாகும். சிறுவர் முதல் பெரியோர் வரை இதனை விரும்பி விளையாடுவர். தைமாதத்தில் வயல்களில் நெல் விளைகின்றது. அவற்றை உண்பதற்காகப் பறவைகள் வயல்களை நோக்கிப் பறந்து வரும். பறவைகளை விரட்ட உழவர்கள் வயல்களுக்கு மேலாகப் பட்டங்களைப் பறக்க விடுவார்கள். அப்போது பட்டங்கள் எழுப்பும் ஓசை காரணமாகப் பறவைகள் கலைந்து விடும். இதன் தொடர்ச்சியாகவே பட்டம் விடும் விளையாட்டுத் தோன்றியது என்பர் பெரியோர். ஆண்டுதோறும் தைப்பொங்கல் நாளிலிருந்து இந்த விளையாட்டுத் தொடங்குகிறது. அதிக உயரங்களில் பட்டங்களைப் பறக்க விடுதல், ஒன்றையொன்று மோதி விழுத்துதல் ஆகியன இவ்விளையாட்டின் சிறப்புகளாகும்.

1. தைமாதத்தில் வயல்களில் எது விளைகின்றது?

____________________________________________

2. பொழுதுபோக்காக விளையாடப்படும் விளையாட்டு எது?

____________________________________________

3. இந்த விளையாட்டு எந்த நாளில் இருந்து தொடங்குகிறது?

____________________________________________

4. வயல்களை நோக்கி எவை வருகின்றன?

____________________________________________

5. பந்தியில் சொல்லப்பட்ட விளையாட்டின் சிறப்புகளுள் ஒன்றை எழுதுக.

____________________________________________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள நாட்குறிப்பை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளமிடுக.**

**சேந்தனின் நாட்குறிப்பு**

- இன்று ஞாயிற்றுக்கிழமை.
- முற்பகல் 10:00 மணிக்கு அப்பாவுடன் தமிழ்ப்பள்ளிக்குச் சென்றேன்.
- அங்கு நான் தமிழ் எழுத்துகள் பற்றிப் படித்தேன்.
- ஆசிரியர் அதை மிகத் தெளிவாக விளக்கினார்.
- பகல் 12:00 மணிக்கு உணவு இடைவேளை.
- எனது நண்பர்களுடன் சிரித்துப் பேசி மகிழ்ந்தேன்.
- 13:00 மணிக்கு வீட்டுக்கு வந்தேன்.

1. பகல் 12:00 மணிக்கு உணவு இடைவேளை. ( )
2. சேந்தனின் தமிழ்ப்பள்ளி சனிக்கிழமை நடைபெறுகிறது. ( )
3. அவன் தனது நண்பர்களுடன் பந்தடித்தான். ( )
4. சேந்தன் தமிழ்ப்பள்ளியில் தமிழ் எழுத்துகள் பற்றிப் படித்தான். ( )
5. ஆசிரியர் சிறப்பாகக் கற்பித்தார். ( )

(5 X 1 = 5 புள்ளிகள்)

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| எழுதுதல் | | | | |
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |
| வாசித்தலும் விளங்கிக் கொள்ளுதலும் | | | | |
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |